பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

O/L 88
வினு விடை
வகுப்புக்கள்
காலே 8 00—பி ப. 1 00
குறிப்பிட்டளவு மாணவர்களே மேலும் சேர்வதற்கு இடவசதி உண்டு
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலே.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L 90
கலே/வர்த்தகம்
விஞ்ஞானம்
Nov 7ல் புதிய பிரிவு அரம்பம்
சகல பாடங்களும் அலகு 01 இலிருந்து ஆரம்பமாகும்.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலே.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஐப்பசி மீ 18 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 22 (03 - 11 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 226

## யாழ். நவீனசந்தைமுன்பாக நேற்றுக் குண்டு வெடிப்பு

நேற்று நண்பகல் 12 மணியளவில்யாழ் நவீன சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக குண்டு ஒன்று வெடித்தது. இந்தச் சம்பவத்தில் சிலர் காயமடைந்ததாக தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ரி. தங்கமலர் (வயது 24) ஆ புஸ்பா தேவி (வயது 22) ஆகிய இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (உ-5)

## யாழ். நகரப் பகுதியில் நேற்று ஊரடங்கு உத்தரவு

யாழ்ப்பாணம் நவ 3

நேற்றுக் காலே 8 மணியளவில் யாழ் நகரப்பகுதியில்- குறிப்பாக பஸ் நிலையம் மற்றும் ஆஸ்பத்திரி வீதிப்பகுதியில் திடீரென ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படடது.

நேற்றுக் காலேயில் அமைதிப் படையினர் ஊரடங்குச் சட்டம் குறித்து ஒலிபெருக்கியில் அறிவித்தனர்.

இந்த உத்தரவை அடுத்து நேற்றுக் காலே நகரில் கூடியிருந்த மக்கள் உடனடியாக அப்பகுதியை விட்டுக் கலேந்து சென்றனர்.

வாகனங்கள் பஸ் நிலேயத்தை விட்டு வெளியேற்றப்பட்டன.

எனினும் நகரில் ஆரிய குளச் சந்தியில் இருந்து மினிவானகள்சேவையில் ஈடுபட்டன. (உ-5)

## ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுஏன்?

### அமைதிப்படை தரப்பில் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ் நகரில் நேற்று திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ஏன் என்பது குறித்து இந்திய அமைதிப்படையினர் விளக்கமளித்திருக்கின்றனர்,

இது தொடர்பாக அமைதிப்படையின் யாழ். நகரக்கொமாண்டர் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

நவம்பர் 2 ஆம் திகதி நண்பகல் 11 மணிக்கு யாழ். நகர சந்தையின் மையப்பகுதியில் உள்ளூர் தயாரிப்புக் குண்டு ஒன்று போராளிகளினல் வெடிக்க வைக்கப்பட்டது இதனல் பெண்மணி ஒருவர் காயமுற்ருர்.

சந்தையின் ஏதோ ஒரு பகுதியில் குண்டு வெடிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக இந்திய அமைதிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கோட்டை மாநாடு நேற்று நடக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.கோட்டை இராணுவ முகாமில் நேற்று நடைபெற இருந்த அரச உயர்மட்ட அதிகாரிகள் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறவில்லே.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் பெர்ஞன்டோ யாழ். மாவட்ட அரச அதிகாரிகளை நேற்றுக்காலே 9 மணிக்கு யாழ் கோட்டை இராணுவ முகாமில் சந்திப்பதற்கு ஏற்பாடாகி இருந்தது.

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி அரச அதிகாரிகள் பலர் யாழ் போதனு வைத்தியசாலேப் பணிப்பாளர் அலுவலகத்தில் காலே 8.45 மணியளவில் கூடியிருந்தனர்.

நண்பகல் 11 15 மணிவரை அவர்கள் அங்கு காத்திருந்துவிட்டு தமது அலுவலகங்களுக்குத் திருமபிச் சென்றனர். (ஒ-5)

## பண்டத்தரிப்பில் சூடு! பெண் ஒருவர் மரணம்!!

யாழ்ப்பாணம். நவ. 3

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நிகழ்ந்ததாக அங்கிருந்துகிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவங்களின் போது பெண்மணி ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரியவந்தது

நேற்றுக் காலே விளான் பகுதியில் இருந்து பண்டத்தரிப்புப் பகுதியை நோக்கி இந்திய அமைதிப் படையினர் ரோந்து சென்றதாகவும்—

பண்டத்தரிப்பு சந்தையை அமைதிப்படையினர் அண்மித்ததும் அவர்களைநோக்கிதிடீரென துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது இதனையடுத்து இப்பகுதியில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன

இப்பகுதியில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டது.

இங்கு இடம்பெற்ற சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நாகேஸ்வரி திருநாவுக்கரசு (வயது 36) என்ற பெண்மணி மரணமானுர்.

பண்டத்தரிப்பு சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று ஹர்த்தாலுக்கு ஜே. வி. பி. அழைப்பு:

# தென் இலங்கையில் மீண்டும் பதற்றநிலே!

## நாடு முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, நவம்பர் 3

நாடு முழுவதிலும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தென்பகுதி தீவிரவாத அமைப்பான ஜே வி. பி அழைப்பு விடுத்ததையடுத்து தென்னிலங்கையில் மீண்டும் பதற்ற நிலே உருவாகியிருக்கிறது.

ஜே வி. பியின் கோரிக்கையால் இன்று தலேநகர் கொழும்பும் தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளும் முற்ருச் செயல் இழக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன

அரசாங்க முன்னேற்பாடு நடவடிக்கைகள் எதனை எடுத்தாலும், மக்கள் பீதி காரணமாக ஹர்த்தால் அழைப்புக்கு எதிராக வீதிக்கு வரமாட்டார்கள் என்று அவை மேலும் தெரிவித்தன.

ஜே. வி. பியின் ஹர்த்தால் கோரிக்கையை முறியடிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது இதன் ஒரு கட்டமாக நேற்று இரவு 11 மணி முதல் இன்று அதிகாலே நான்கு மணிவரை நாடு முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தமது இயக்கத்தைச் சேர்ந்த தலேவர்களில் ஒருவர் பத்து நாட்களுக்கு முன்னர் கொல்லப்பட்டதை நினேவுகூர்ந்து அவருக்கு அஞ்சலி செலுத்தி துக்கம் அனுஷ்டிக்கும் விதமாகவே ஜே வி.பி. இயக்கம் இந்த ஹர்த்தாலே ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹர்த்தால் குறித்து ஜே. வி பி இயக்கம் சுவரொட்டிகள் மூலமாக அறிவித்திருந்தது.

அத்துடன் அலுவலகங்கள், வர்த்தக நிலேயங்கள் போன்றவற்றுக்கும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தனிப்பட்ட தகவல்கள் அனுப்பப்பட்டிருப்பதாக கொழும்புவட்டாரங்கள் தெரிவித்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப கண்ணி வெடியும் அங்காலே தள்ளி வெடிக்க ஆரம்பிச்சிட்டுது எண்டு சொல்லுங்கோ...!

## மரணதண்டனேக்கு இலக்கானவரின்

# இறுதிச் சடங்கில் தாக்குதல்! 9 பேர் பலி! பெலியத்தையில் சம்பவம்

கொழும்பு, நவ 3

தென் மாகாணத்தில் தங்காலேக்கு அருகே பெலியத்தை என்னும் இடத்தில் கொலே செய்யப்பட்ட ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் மீது பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்திற்கு மக்கள் விடுதலே முன்னணியின் இராணுவப் பிரிவான டி ஜே. வி. அமைப்பு உரிமை கோரியிருக்கிறது.

இந்த அமைப்பினுல் மரணதண்டனேக்குள்ளாக்கப்பட்ட ஒரு நபரின் மரண வீட்டில்தான் இச் சம்பவம் இடம்பெற்றது.

பல குற்றங்களுக்காக இவருக்கு மரணதண்டனே நிறைவேற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது அவரின் மரணச் சடங்கை பெரிய அளவில் நடத்தக்கூடாதென்றும் டி. ஜே. வி.

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சேபால, ஏர்னஸ்ட் அமைச்சரவைக்கு அழைப்பு

### நாட்டின்பாதுகாப்புகுறித்து ஆராய்வு

கொழும்பு. நவ. 3

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சேபால ஆட்டிகல, பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோரும் அழைக்கப்பட்டு இருந்தனர்.

கூட்டத்தில் நாட்டின் தற்போதைய நிலேமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

தென்பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது பற்றியும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் நீண்ட நேரம் ஆராயப்பட்டதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன,

பன்னலேயில் இடம்பெற்ற ஆயுதக் கொள்ளேச் சம்பவம் குறித்தும் ஆராயப்பட்டதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ ஐ]

## பன்னலே முகாம் தாக்குதல் டி.ஜே.வி உரிமைகோருகிறது

கொழும்பு. நவ 3

பன்னலே இராணுவப் பயிற்சி முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஆயுதக்கொள்ளே ஆகிய சம்பவங்களுக்கு மக்கள் விடுதலே முன்னணியின் [ஜே. வி பியின்] ராணுவப் பிரிவான டி.ஜே வி. உரிமை கோரி இருப்பதாக பி.பி.சி. வானெலி நேற்று அறிவித்தது.

மக்கள் விடுதலே முன்னணியின் பொலிற்பீரோ உறுப்பினர் ஒருவர் பத்துத் தினங்களுக்கு முன்னர் கொலே செய்யப்பட்டதற்குப் பதில் நடவடிக்கையாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும். உரிமை கோரும் அறிக்கையில் தெரிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் நாளே வெளிநடப்பு

புதுடில்லி, நவ 3

இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலத் தொடர் அங்குரார்ப்பணமான நேற்று எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

விவசாயிகள் கிளர்ச்சி பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணையை லோக சபையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தன.

இதற்கு அனுமதி வழங்க மறுத்ததைத் தொடர்ந்தே, எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

இந்திரா காங்கிரஸ் கூட்டத்தில் பிரதமர் காந்தி நிகழ்த்திய பேச்சு ஒன்று தொடர்பாக ராஜ்ய சபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. (உ-எ)

### சுபநேரம்

03- 11 - 1988
ஐப்பசி 18
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7-34முதல் 9-04வரை
ராகுகாலம்:-
1 34 முதல் 3-04 வரை

## பஸ் விபத்தில் 62 பேர் மரணம்

புதுடில்லி நவ. 3

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுக்காலே இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 62 பேர் உயிரிழந்தனர்.

கிஸ்வாரில் இருந்து ஜம்மு நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த பஸ், வீதியில் இருந்து வழுக்கி 200 மீற்றர் பள்ளத்தில் விழுந்தது. (ஒ-எ)

## 4 தீவிரவாதிகள் கைது

கொழும்பு மாநகரில் நேற்று நான்கு தீவிரவாத சந்தேக நபர்களே பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

கைதானவர்களில் ஒருவரிடமிருந்து 200 பயமுறுத்தல், எச்சரிக்கை கடிதங்களேப் பொலிஸார் கைப்பற்றினர் என்றும் கூறப்பட்டது, [உ-எ]

### ஆசியக் கிண்ண கிரிக்கெட்:

## இலங்கை அணிக்கு மூன்ருவது வெற்றி!

டாக்கா, நவ. 3

நேற்று டாக்காவில் இலங்கை-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆசிய கிண்ணகிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களினுல் வெற்றி பெற்றது

இதன் மூலம் ஆரம்பக்கட்ட ஆட்டங்கள் எதிலும் தோல்வியடையாமல் இறுதியாட்டத்திற்கு இலங்கை அணி தெரிவாகியிருக்கிறது

நேற்றைய ஆட்டத்தின் போது இலங்கை அணித்தலேவர் ரஞ்சன் மடுகல்ல விளேயாட வில்லே காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் ரஞ்சன் மடுகல்லவுக்கு பதிலாக ரவி ரட்ணுயக்கா இலங்கை அணிக்குத்தலேமை தாங்கினுர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 35 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 1 8 ஓட்டங்களேப் பெற்றது

இலங்கை அணி 31 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 120 ஓட்டங்களேப் பெற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது இலங்கைத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எப்பாவெலவில் கண்ணி! 6 பொலிஸார் படுகாயம்!!

கொழும்பு, நவ.ஃ

அநுராதபுரம் மாவட்டத்தில் எப்பாவெல என்னும் இடத்தில் நேற்றுக் காலே நிகழ்ந்த கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் உதவிப்பொலீஸ் இன்பெக்டர் ஒருவரும் 5 பொலீஸாரும் படுகாயமடைந்தனர்.

செக்கிராவ—தலாவ வீதியில் ரோந்துசென்ற பொலீஸாரின் வாகனமே கண்ணிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### யாழ் இலங்கை வங்கிக் கிளேயில்

## 1,200 குடும்பங்களுக்கு சனியன்று நிவாரணம்

யாழ்ப்பாணம். நவ 3

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர்த்தலுக்கான ஆயிரம் ரூபா நிவாரணப் பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் எதிர்வரும் சனிக்கிழமை ஐந்தாம் திகதி மொத்தம் ஆயிரத்து இருநூறு குடும்பங்களுக்கு நிவாரணப்பணம் வழங்க இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்திருக்கிறது

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ் இலங்கை வங்கியின் பிரதான கிளேயூடாக இந்தக்கொடுப்பனவு அன்றைய தினம் வழங்கப்படும்

இதற்கென மேற்படி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னுகம் மக்கள் வங்கியில் 9,10 இல் கொடுப்பனவு

யாழ்ப்பாணம் நவ 3

ஆயிரம் ரூபா நிவாரணப்பணம் வழங்கும்திட்டத்தை மக்கள்வங்கிசுன்னுகம் கிளே எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஆரம்பிக்கவிருக்கிறது

சுன்னுகம் கிழக்குக் கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த நிவாரணப் பணம் பெறுபவதற்குத் தகுதிபெற்ற 346 குடும்பங்களுக்கு எதிர்வரும் ஒன்பதாம் திகதியும், பத்தாம் திகதியும் மக்கள் வங்கி இந்த நிவாரணப்பணத்தை வழங்கும்

சம்பந்தப்பட்ட பகுதியில் நிவாரணப்பணம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள்பற்றிய விவரங்களே மக்கள் வங்கி அந்தந்தப்பகுதிக் கிராம சேவையாளருக்கு அனுப்பி வைத்திருக்கிறது

இதேவேளேயில் இந்த விவரங்கள் மக்கள் வங்கியிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்

காலே 8-30 மணிமுதல் நிவாரணப்பணத்தை வழங்குவதற்கு மக்கள் வங்கி தீர்மானித்திருக்கிறது. (ஒ ஐ)

## பருத்தித்துறையில் தேடுதல்

வடமராட்சி, நவ, 3

பருத்தித்துறை கந்த உடையார் வீதிக்கு அண்மையில் உள்ள பகுதியில் நேற்றுக்காலே தேடுதல் வேட்டை இடம்பெற்றது. அப்பகுதியில் சில வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான வாலிபர்களே விடுவிக்கக்கோரி அவர்களது பெற்றோர்கள் புலோலி அமைதிப் படை முகாமுக்குச் சென்றனர்

நேற்றுமாலே ஐந்து மணிவரை கைதானேர் விடுவிக்கப்படவில்லே. (உ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான ரேடியோ, வீடியோ, டெக் T. V ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் I. C Trancistor. வீடியோ (Head) அன்ரனு பூஸ்டர் ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடனும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம். R. V. சென்ரர், No F 6 Model Market Jaffna. உரிமையாளர்: விசு. (7909)

பாவித்த தளபாடங்கள் Show-Case, மேசை, கண்ணாடி மேசை உடன் விற்பனைக்கு உண்டு 75/1 பலாலி ரோட், கந்தர்மடம் (7708)

தளபாடங்கள், குளிர் சாதனப் பெட்டி, ஹோல் செற். Fan, விருந்தை செற், கட்டில் மெத்தை, கண்ணாடி மேசை, கசற் றேடியோ, சாப்பாட்டு மேசை, செற்றி குசன்கள் மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. No: 7, பண்டாரக்குளம் மேற்கு வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் (7702)

உங்கள் உணவின் சுவையை மேலும் ருசியூட்ட வட இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட 'வெள்ளைப் பூடு ஊறுகாய்' (Garlic Pickle) விற்பனைக்கு உண்டு. 800G போத்தல் 27/50 மட்டுமே. வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு. M. G M & Stores, 777, K.K.S Rd, Jaffna. (7636)

நல்ல புத்தம் புதிய நிலையிலுள்ள 30 Sri Hiace LH-30 Model Van (டீசல்) உடன் விற்பனைக்கு உண்டு. Full Seated Cut Glass உள்ளது. முருகன் இல்லம். பழைய தெரு, இருபாலைச்சந்தி, கோப்பாய். (C-718)

## தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரன் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## மலிவு விற்பனை

முற்றிலும் புதிய டிசைன்களில் உருவான தீபாவளி வாழ்த்து மடல்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு. பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (7601)

## காணி விற்பனை

தெல்லிப்பழை கட்டுவன் ரோட்டில் அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் வீடுகட்டக் கூடிய இரண்டேகால் (2¼) பரப்புக் காணி பாதையுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாகலிங்கம் துரைசிங்கம், கோப்பாய் ரோட், உரும்பராய் தெற்கு. உரும்பராய். (7694)

## கோழிக்குஞ்சு விநியோகம்

3½ மாத GC பிறவுண்பேடு புதன்கிழமையும் Hisex Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை சறுப்பு பேட்டுக்குஞ்சுகள், கறுப்பு, சேவற்குஞ்சுகள் 4-11 88 வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (7649)

Hyline கறுப்பு, வெள்ளை சில்வர் பேட்டுக் குஞ்சுகளும் புரொயிலர் குஞ்சுகளும் மற்றும் சேவல் குஞ்சுகளும் 17 11 88இல் இருந்து விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும் ஒரு கிழமைக் குஞ்சு சிவப்பு சேவலும் பேடும் உண்டு தொடர்பு கொள்ளவும். Lucky Farm House, Mathavady Lane. Thirunelvely STR AND SON (7699)

## இறைச்சிக் கோழி விநியோகம்

பிறிமா இன சிவப்பு, வெள்ளை ஒரு நாள் பேட்டுக் குஞ்சும். புரொயிலர் மற்றும் சேவல் குஞ்சுகளும் 30 - 10 - 88 இல் இருந்து விநியோகிக்கப்படுகிறது. தேவைப்படுவோர் உடன் வரவும். M.G.M Forage Stores, 208, 1st Cross St, Jaffna. (7635)

## தேவை

அருநெல்லிக்காய், முழுநெல்லிக்காய், விளாம்பழம், மாம்பழம், பனம்பழச்சாறு ஆகியன தேவை. விலையை கலந்தாலோசித்து தீர்மானிக்கலாம். அத்துடன் பாவற்காய் வற்றலும் பெருமளவில் தேவை. தொடர்பு: அ. சத்தியன், 140, நாவலர் ரோட், (மனோகராதியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். (C438)

பாலர் வகுப்பிலிருந்து O.L, A.L வரை தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. கடிதம் மூலம் காலை 6 00 - 9.00 மணிக்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, (7908)

## புதிய பிரிவு ஆரம்பம்

பொருளியல் 89 திரு. உதயன், தேசிய வருமானம் சனி 05 - 11 - 88 மாலை 3 மணி (முதல் வகுப்பில் நேரம் மாற்றப்படும்) கணக்கியல் பங்குடைமை திரு சௌந்தி Ecalom Tuition Centre மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம். (7902)

## ரோணியோ

தரமான ரோணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்று" சேவைப் பிரிவு, இல: 19, 8ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692)

## அறிமுகக்கார்டுகள்

தாளையடி நவ 3 வடமராட்சி கிழக்கில் கடந்த கால சம்பவங்களினால், இடம்பெயர்ந்த, சொத்துக்களை இழந்த குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான குடும்ப அறிமுக கார்ட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உடுத்துறை கிராம சேவையாளர் பிரிவில் இந்த அறிமுகக் கார்ட்டுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் மெசின் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்று' சேவைப் பிரிவு, இல. 19. 8ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

## கல்வி

G C. E. (O.L), 1988 December, புதிய, பழைய கல்வித் திட்டத்திற்கமைய கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 20 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு ஒரு மாதத்திற்குள் சகல பகுதிகளும், துரிதகெதியில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (7907)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு

# 100 தெளி கருவிகளும் 6 உழவு இயந்திரங்களும்

## கமநல சேவை உதவி ஆணையாளருக்குப் பாராட்டு

முல்லைத்தீவு, நவ 3 முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி முல்லைத்தீவு கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு. செ. பஞ்சலிங்கம் எடுத்த தீவிர முயற்சியால் அரசாங்கம் தற்போது 100 தெளி கருவிகளையும் 6 உழவு இயந்திரங்களையும் வழங்கியுள்ளது.

இவை ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்கும் வழங்கப்படும். விவசாயிகள் அந் நிலையங்கள் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் தெளிகருவிகள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய போது மேற்கண்டவாறு கூறினார்.

வைபவத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட உதவிக் காணி ஆணையாளர் திரு. ஆ சிவசாமி தலைமை வகித்தார்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய சூழ்நிலையில் இம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயற் காணிகள் செய்கைபண்ணப்படவில்லை.

இதனால் மக்கள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என நம்புகின்றேன் என்றார்.

முதலாவது தெளிவு கருவி குமுளமுனை கமநல சேவை நிலையத்துக்காக சமாதான நீதிவான் திரு. ந. குமாரசாமியிடம் வழங்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகலிங்கம். உதவி அரசாங்க அதிபர் திரு. சி. க. சர்வானந்தன், கமநல சேவை உதவி ஆணையாளர் திரு செ. பஞ்சலிங்கம், விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. என். ரகுபதி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். (இ-92)

# ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை: 60 சத வீதமானோரே பெறு பேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 3 ஆண்டு 6இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் 60 சத வீதமானோரே பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இந்தத் தகவலை யாழ் கல்வித்திணைக்களப் பிரதம கல்வி அதிகாரியும், யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்குப் பதிலாகத் தற்பொழுது கடமையாற்றி வருபவருமான திரு. கு. சோமசுந்தரம் உதயனுக்குத்தெரிவித்தார்.

ஏனைய 20 சத வீதமானோர் பழைய மாணவர்களின் பிள்ளைகள், சகோதரர்கள் ஆகியோரில் இருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளையில் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதற்கான புள்ளிகளின் வரைமுறை கல்லூரிகளுக்கு ஏற்ப மாற்றமடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் கல்லூரிகளுக்கு இந்த நடைமுறைகள் பொருந்தமாட்டா. (இ-9)

# யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்குநன்கொடைப் பணம் வழங்க நடவடிக்கை

மானிப்பாய், நவ. 3 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

நன்கொடைப் பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சு எடுத்து வருவதாக அவர் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில கடந்த ஆண்டு ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படவேண்டிய நன்கொடைப் பணம் வழங்கமுடியாதுபோய் விட்டதாகவும், அப்பணத்தை விரைவில் வழங்குவதற்கு உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் திரு. அன்ரன் அல்பிரட்தெரிவித்தார்.


★ எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) ★ விஜயகாந் ★ ராதிகா
நல்லவன்
(PYRAMID ORIGINAL)

(2) ★ அர்ஜுன் ★ அஸ்வினி
எடுத்த சபதம் முடிப்பேன்
(ORIGINAL)

(3) ★ தியாகராஜன் ★ கீதா
ஊமைத் துரை
(R. V. V. ORIGINAL)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/43)


# கணபதி தத்துவம் உயிர் நாடி

## சித்ருபானந்தா கூறுகிறார்

பருத்தித்துறை, நவ 3 'கணபதி தத்துவம் வாழ்க்கையின் உயிர் நாடி.

கணபதிக்கு மேற்பட்ட தலைவர் இல்லை உலகில் உள்ள ஜீவராசிகள் வாழ விநாயகர் வழிபாடும் ஆராதனையும் மிக மிக முக்கியமானது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் போது 'கணபதி தத்துவம்' என்னும் நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மனிதன் இறைவன் மேல் தூய்மையான ஈடுபாடு கொண்டால் வாழ்க்கை செவ்வனே இயங்கும்.

சீர்காழி ஞானசம்பந்தர் அழுதபொழுது சிவபெருமான் பார்வதி சமேதரராய் வந்து ஞானப்பால் கொடுத்தது நமது சமயத்தின் மகிமைக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுகிறது.

இறைவனை மனமுருகி வழிபட்டால் இறைவன் மனிதனுக்கு யோகத்தையும், சேமத்தையும் கொடுப்பான் என ஸ்ரீமத் பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் இயம்பியுள்ளார்.

சமயப்பற்று நிதர்சனமாக நமது வாழ்வில் அமையாதது நமது பெருங்குறையாகும்.

இதற்கு நாம் தான் பொறுப்பு.

நாம் ஐம்புல அடக்கத்தை மேற்கொண்டால் இறைவனின் அன்பினைப் பெறலாம்.

இப்படி அவர் கூறினார். (ச-118)

## விளையாட்டரங்கு

# பிரபல உதைபந்தாட்ட மத்தியஸ்தர் ஓய்வுபெற்றார்

யாழ்ப்பாணம், நவ. 3 கொழும்பு பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் போக்குவரத்துப் பகுதியில் சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டனாகக் கடமையாற்றும் திரு. ரி. பேரின்பநாயகத்தை விளையாட்டு உலகில் தெரியாதவர்கள் எவருமே இருக்க முடியாது.

இவர் விளையாட்டு உலகில் உதைபந்தாட்டம். ரெனிஸ் கிரிக்கெட் ஆகிய துறைகளில் சர்வதேச புகழ்பெற்ற விளையாட்டு வீரர் மட்டுமல்ல, ஒரு சிறந்த மத்தியஸ்தருமாவார்.

1955 - 56ஆம் ஆண்டுகளில் தென் ஆஸ்திரேலியா பள்ளி மாணவர் கிரிக்கெட் கோஷ்டி யாழ்ப்பாணம் வந்தபொழுது அக் கோஷ்டிக்கு எதிராகத் திறம்பட விளையாடிப் புகழைத் தேடினார்.

சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் 1961இல் அரசாங்க சேவைக் கோஷ்டியின் சார்பில் இந்திய-பாகிஸ்தான் கோஷ்டிகளுக்கு எதிராக விளையாடினார்.

1963இல் இவர் குருநகர் ... கோஷ்டியின் சார்பில் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு எதிராக விளையாடிப் புகழ் ஈட்டினார்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் என்ற சர்வதேச புகழைத் தேடியுள்ள இவர் 19 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மத்தியஸ்தராக இருந்து பிலிப்பீன்ஸ், தாய்லாந்து, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளிலும் மத்தியஸ்தம் வகித்தார்.

ஸ்பெயின் தேசத்தில் 1952இல் நடைபெற்ற 'உலகக் கிண்ணப்' போட்டியில் பங்குபற்றும் சலாக்கியம் இவருக்குக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

"பேரின்ஸ்" என அன்பாக அனைவராலும் அழைக்கப்படும் திரு. பேரின்பநாயகம் ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தைக் கட்டி வளர்த்து அதன் தலைவராக 16ஆண்டுகள் கடமையாற்றினார்.

கடந்த முப்பது ஆண்டுகளாக விளையாட்டு விருத்திக்கே தன்னை அர்ப்பணித்த இவர் இப்பொழுது விளையாட்டுத் துறையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

# மீன்பிடி உபகரணங்கள்

தலைமன்னார் நவ 3 யாழ். அகதிகள் புனர்வாழ்வுச்சங்கமும், மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கமும் இணைந்து நோர்வேநாட்டின் உதவியுடன் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய தலைமன்னார் மேற்கு கிராமமக்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளனர்:

நோர்வே அதிகாரிகளுடன் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத் தலைவர் அருட்திரு. சேவியர் குரூஸ், பங்குத்தந்தை அருட்திரு மொன்போட் அடிகளார் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று இக்கிராமங்களுக்கு விஜயம் செய்தது. (ச-ரி)

# பதவி வெற்றிடம்

சிரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
சண்டிலிப்பாய்.

அனுபவம் உள்ள ஒரு சிவாச்சாரியாரும் மடப்பள்ளி வேலை தெரிந்த ஒரு உதவிப் பூசகரும் உடனடியாகத்தேவைப்படுகின்றது.

தகுதி உடையவர்கள் கூட்டாகவோ, தனித்தோ மேற்கூறிய பதவிகளுக்கு தங்கள் தகைமைகளைக் குறிப்பிட்டு தாங்கள் எதிர்பார்க்கும் மாதாந்த வேதனத்தையும் குறிப்பிட்டு தக்க சான்றிதழ்களுடன் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு பதவித் தபால் மூலமோ அல்லது நேரிலோ 20 - 11 - 88க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**மு. ஐயாத்துரை,**
தலைவர், தர்மகர்த்தா சபை,
சண்டிலிப்பாய்.

(C/441)

# Fortuna Enterprises

IMMEDIATE VACANCIES

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

**Kuwait - குவைத்**

1. **Female Cleaners - 50**
   பெண் சுத்திகரிப்பாளர் K.D 35-3850/-
   இருப்பிடம் மட்டும்.
2. **Lady Tailors- (House Tailoring Only) - 20**
   பெண் தையல் ஆள்
   (வீட்டுத் தையல் மாத்திரம்.
   சாப்பாடு+இருப்பிடம் -K.D40--4400/-
3. **Heavy Vehicle Drivers with Kuwait Licence - 50**
   கனரக வாகன சாரதிகள் (முன்பு குவைத்தில்வேலைசெய்தவர்கள் மட்டும்)
   இருப்பிடம் மட்டும்K. D-100 - 11,000/-
4. **Heavy Vehicle Drivers with Gulf Licence - 50**
   கனரக வாகன சாரதிகள்- முன்னர் அராபிய குடாநாட்டு வேலை செய்த அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
   இருப்பிடம் மட்டும் K. D 60— 6600/-
5. **Light Vehicle Drivers - 50**
   சாதாரண வாகனச் சாரதிகள் K . D 45 - 4950/-
   இருப்பிடம் மட்டும்
6. **Air Condition Technicians-10**
   குளிரூட்டல் சாதன தொழில் நுட்பவியலாளர் K . D 70- 7700/-
   இருப்பிடம் மட்டும்
7. **Muslim Drivers with Gulf Experience - 10**
   முஸ்லிம் சாரதிகள் முன்பு அராபிய நாட்டு அனுபவம்.
   சாப்பாடு + இருப்பிடம்- 600 S . R -5040/-
8. **Trailor Drivers with Gulf Experience - 10**
   கனரக வாகனசாரதிகள்(முன்பு அராபிய நாட்டு வேலை செய்த அனுபவம் உள்ளவர்கள்)
   சாப்பாடு+இருப்பிடம் S.R 800 -6720/-
9. **House Maids - 20**
   பெண் பணியாளர் - K.D 30 - 3300/-
   சாப்பாடு + இருப்பிடம்

★ பாஸ்போட் செய்து கொடுக்கப்படும். பொன்ட் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்'

யாழ்ப்பாணப் பிரதிநிதி,

**இ. விஸ்வேஸ்வராயன்**
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(C/435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவு:

## 89 துரித மீட்டல்
(Evening Classes)

பழைய பாடத் திட்டம்
**O/L ஆரம்பம்: 4- 11- 88**
மாலை 2. 45 - 4. 45

மு. குறிப்பு:
சட்டமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்

O/L மாணவர்களின் நன்மை கருதி புதிய, பழைய பாடத் திட்டத்துக்கான பரீட்சை சென்ற வருடம் போல் இலவசமாக நடத்தப்பட உள்ளது.

பெயர்களைப் பதிவு செய்து அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

**விக்னு டியூசன் சென்ரர்**
(C/722)

# O/L மாணவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்

## G. C. E. [O/L]-1988 December PRACTICE EXAM

# இலவசம்!

சென்ற ஆண்டு G C E (O/L) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சையை எமது நிறுவனம் மட்டுமே இலவசமாக நடாத்தியது மாணவர்கள் அறிந்ததே.

இம் முறையும் O/L மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சையை மாணவர்கள் நலன் கருதி நடாத்த இருப்பதால் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம். பரீட்சைக்கான விடைத்தாள்களும் இலவசமாக வழங்கப்படும்.

இம் முறை கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களில் மட்டுமே பரீட்சை நடாத்தப்படும். குறுகிய காலத்தில் முழுப்பாடங்களிலும் பரீட்சை நடாத்த முடியாதமையிட்டு வருந்துகின்றோம். அரசாங்க இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டால் ஏனைய பாடங்கள் அனைத்திலும் பரீட்சை நடாத்தப்படும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம் அதற்கான திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

- ★ G. C. E, (O/L) December க்கு பழைய/புதிய பாடத்திட்டங்களில் தோற்ற இருக்கும் சகல மாணவர்களும் இப் பரீட்சையில் தோற்றலாம்.
- ★ பரீட்சைக்கான நிலையங்களும், திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.
- ★ இப் பரீட்சையை நடாத்த விரும்பும் ஏனைய நிறுவனங்களும், பாடசாலைகளும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். சென்ற முறை எமது பரீட்சையை நடாத்திய பாடசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- ★ பரீட்சைக்கு 10 11 - 88 க்குமுன்னர் எமது நிறுவனத்தில் பதிவு செய்து அதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும். பதிவு செய்ய வரும் பொழுது அடையாள அட்டையைத் தவறாமல் கொண்டு வரவும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ★ மாணவச் செல்வங்களுக்கு இந்தப் பரீட்சை ஓர் வழிகாட்டியாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

Do will at our Practice Exam and be Ready for the Final Exam

**FREE EXAMINATION UNIT**
**VICKNA TUITION CENTRE**
52, Stanley Road,
JAFFNA.
(C-714)

ஆயுர்வேதக் கல்லூரியில்

# சித்தி அடைந்தும் சேவை ஆற்ற முடியாத நிலை

மானிப்பாய், நவ 3

யாழ்ப்பாணம் இலங்கை ஆயுர்வேதக் கல்லூரியில் வைத்தியக் கல்வியை மேற்கொண்ட சுமார் எண்பது பயிற்சியாளர்கள் தமது பயிற்சியை முடித்துக் கொண்டபின், உத்தியோக பூர்வமான முறையில வைத்திய சேவையை ஆற்ற முடியாத நிலையில் உள்ளார்கள்.

இவர்களுக்கான வைத்தியர் பதிவு இதுவரை செய்யப்படாததால் சொந்தமாகவும தொழில் செய்ய முடியவில்லை; அரசாங்க வைத்திய சேவையில் சேரவும் வாய்ப்பில்லை என்று பயிற்சிபெற்ற ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தமது நிலை பற்றி அவர் மேலும் கூறியதாவது;

இலங்கை ஆயுர்வேதக் கல்லூரியில் 4 ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னர் அரசாங்க பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் 1984; 85 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆயுர்வேதக் கல்லூரி நடத்திய பரீட்சைக்குத் தோற்றினோம்.

பரீட்சையில் நாம் சித்தியடைந்ததுக்கான சான்றிதழ்களைக் கூட மேற்படி கல்லூரி எமக்கு வழங்கியுள்ளது.

1986 87 ஆம் ஆண்டுக்கான பரீட்சையை அரசாங்கம் வைத்த போது எமது நிலையை விளக்கி எமது சித்தியைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டோம்.

ஆனால் எமது பதிவை செய்வதற்கு அரசாங்கம் மறுத்து விட்டது.

இலங்கையின் பல பாகங்களில் இருந்து வந்து பயிற்சிபெற்ற சுமார் எண்பது பேர் மீண்டும் ஒரு பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

எமது நிலையை விளக்கி, எழுதும் பரீட்சை ஒன்றை நடத்தாமல் வாய்மொழி மூலமான ஒரு பரீட்சையை நடத்தி எமது பழைய எழுத்துப் பரீட்சையை ஸ்திரப்படுத்தி, எம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு அரசாங்கத்தினரையும் ஆயுர்வேதக் கல்லூரி அதிபரையும் கேட்டுள்ளோம்.

பாதிக்கப்பட்ட எமக்கு சாதகமான முறையில அவர்கள் நடந்து எம்மைப் பதிவு செய்து எமது வைத்தியச் சேவை ஸ்திரமின்மையைப் போக்க வேண்டும்'

(ச 90)

அலைந்தும் பயன் இல்லையாம்

# மண்ணெண்ணெய் முத்திரை நீக்கப்பட்டோர் ஏமாற்றம்

குருநகர், நவ 3

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வண்ணார்பண்ணை ேற்கு நாவலடி ஒழுங்கையைச் சேர்ந்த கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு நடைமுறையில் இருக்கும் 12 மாதங்களுக்குமான உணவு முத்திரைத் தொடருடன் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மண்ணெண்ணெய் முத்திரையை நிறுத்தி உள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் பல தடவைகள் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கும் நல்லூர் உதவி அரச அதிபர் காரியாலயத்துக்கும் அலைந்தும் பலன் எதுவும் இல்லை என்று அறியப்படுகிறது.

மண்ணெண்ணெய் முத்திரை நீக்கப்பட்டவர்களை அக்டோபர் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நல்லூர் உப அரச அதிபர் காரியாலயத்திற்கு சமூகம் தரும்படி கிராம சேவையாளரால் கூறப்பட்டது

கல்வியங் காட்டில் அமைந்துள்ள மேற்படி காரியாலயத்துக்கு ஏறத்தாழ இருபது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சென்றிருந்தும் பயன் எதுவும் இல்லாமல் திரும்ப நேர்ந்ததுஎன்று தெரிவிக்கப்படுகிறது.

(இ 51)

மானிப்பாய் கோவில்பற்று
ப. நோ. கூ. சங்கம்

## கூறுவிலை கோரல்

சங்கத்தால்வாடகைக்குவிடப்படும் தகரப் பந்தலின் திருத்த வேலைகளான அரசகுமுத்திரையடப்பட்ட கூறுவிலைகள் 07- 11- 88திங்கட்கிழமை பி ப 4 00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் திருத்த வேலைகளை சங்க வேலை நேரத்தில் நேரடியாகப் பார்வையிடலாம்.

- பொது முகாமையாளர்
(C/433)

# வேலை வாய்ப்பு

**லிபியா:**

1. H.V DRIVERS
2. PLUMBERS
3. STEEL ERECTORS
4. FIBRE GLASS TECHNICIAN
5. PIPE FITTERS
6. INSULATION TECHNICIANS/FITTERS
7. REPAIR TECHNICIAN FOR GENERATORS/WELDING MACHINES
8. MECHANICS For AIR COMPRESSORS
9. SPECIALIST For ELECTRICAL MOTOR CONTROL SYSTEM

சம்பளம்:
8 மணித்தியாலத்திற்கு
9 —10,000 ரூபா வரை
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

கொழும்பில்:
18 1/4 முகலிகே மாவத்தை,
கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்;
**ந.பாஸ்கரன்,J.P**
இந்திராணி ஏஜென்சி
நெல்லியடி,
கரவெட்டி.

(7851)

# யாழ். பஸ் நிலையத்தில் நடந்த துணிகரத் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் பஸ் நிலையப் பகுதியில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

செவ்வாயன்று காலையில் யாழ் ஸ்நிலையத்தில் முல்லைத்தீவு செல்வதற்காக நின்ற ஒரு குடும்பத்திடம் இருந்து சங்கிலி ஒன்று அபகரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது,

செவ்வாயன்று முல்லைத்தீவு பஸ்ஸுக்காக ஒரு பெண்ணும் அவரது மகனான சிறுவன் ஒருவனும யாழ் பஸ்நிலையத்தில் காத்து நின்றனர்.

முல்லைத்தீவுக்கான பஸ் வந்து பஸ் நிலையத்தில் தரித்து நின்றபோது பிரஸ்தாப பெண்ணும சிறுவனும் பஸ்ஸில ஏற முற்பட்டனராம்.

அவ்வேளை சிறுவனை மெதுவாகத் தூக்கிச் சென்ற ஒருவர் ஒதுக்குப்புறமான ஒரு இடத்திற்குக்கொண்டு சென்று அங்கு வைத்து சிறுவனின் அரைப்பவுண் பெறுமதியான சங்கிலியை அபகரித்துச் சென்று விட்டாராம்.

(இ-9)

ஆசிரியர் கடன்

# 11 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க கோரிக்கை

தாவடி நவ 3

கிளிநொச்சிமாவட்ட ஆசிரியர்கள் இரண்டு வருட சம்பள முற்பணத்தை கடனாகப் பெறுவதற்கான கடன் விண்ணப்பப் பத்திரம் கிளிநொச்சி கல்விப்பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளது

இந்த விண்ணப்பப் பத்திரங்களை, எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னதாக சேத விவர அத்தாட்சியுடன் பூர்த்தி செய்து, பிரந்திய கல்விப் பணிமனையில ஒப்படைக்குமாறு கோரப்பட்டிருக்கிறது.

உறுதிபடுத்தப்பட்ட ஆசிரிய சேவையில் 10 வருடங்களை பூர்த்தி செய்தவர்கள் இரண்டு வருட சம்பள முற்பணத்தை கடனாக வும், 10 வருடங்களைப் பூர்த்தி செய்யாத உறுதிப்படுத்தப்பட்ட சேவையில் உள்ளவர்கள் ஒருவருட சம்பள முற்பணத்தினைக் கடனாகவும் பெற முடியும் என கிளிநொச்சிப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ச-144)

## மீண்டும் அந்த பாடசாலைக்கு இடமாற்றம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பிரின்சிபல் ஆசிரியர் திரு ற நரேந்திரராசா [illegible] துரைச்சாமி மகாவித்தியாலயத்தில் ஓராண்டு [illegible] மாற்றம் பெற்றுள்ளார்

(ச-75)

## பிரசைகள்குழு தலைவர்ராஜினமா

வடமராட்சி, நவ. 3

பருத்தித்துறை பிரசைகள் குழுத்தலைவர் திரு செ விசாகசுந்தரம் தமது பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரசைகள் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் தாது பதவிகளை இராஜினமா செய்யவிருப்புவதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-160)

## சிறுப்பிட்டி ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம் நவ. 3

சிறுப்பிட்டி துர்க்கை அம்மன் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பல ஆயிரம்ரூபா பெறுமதியான பொருள்கள் திருடடுப் போயிருக்கிறது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில்இருந்த துர்க்கை அம்மன் விக்கிரகம் நகர்த்தப்பட்டு அதன் கீழ் இருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான செப்பு, பவுண் தகடுகள் அகறறப்பட்டிருக்கின்றன.

# வெளி நாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70 க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (Job Categories) உயர் தொழில் முதல் சிறுதொழில் வரை. 17 முதல் 50 வயதுவரை ஆண்களும். பெண்களும் கட்டணம் எதுவுமில்லை நீங்களே உங்கள் வெளிநாட்டுத் தொழிலதிபருடன் தொடர்புகொண்டு உங்கள் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக் கொள்ள முதலில் சுயவிலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட கபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**Foreign Assignments,**
**Chunnakam.**
(7863)

# துணை வேந்தர் நல நிதியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

துணை வேந்தர் நல நிதியம் என்னும் பெயரில் ஒரு நிதியத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடக்கியுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில் / கல்வி உதவிப்பணம் என்பனவற்றில் எதனையும் பெறுக மாணவர்களுக்கும், எதிர்பாராத சூழ்நிலை காரணமாகத் துன்புறும் மாணவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்குவதே இந் நிதியத்தின் முக்கிய குறிக்கோளாகும் மாணவர் நலனைச் சிரிய நிலையிலும் உயரிய தரத்திலும் பேணும் முகமாக பலகலைக்கழக கவுன்சிலின் ஆலசனையோடு இந்நிதியத்தின முகாமைச் சபை நெருக்கடியான நேரங்களில் நிதியுதவி வழங்குவதுடன் பிற வகையான உதவி நடவடிக்கைகளையும மேறகொள்ளும்.

பழைய மாணவர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள், தனிப்பட்டோர் ஆகியோரிடமிருந்தும், கழகங்களிடமிருந்தும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

காசுக்கட்டளைகள், காசோலைகள் என்பனவற்றை 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நலநிதியத்திறகு' அனுப்பி வைக்கலாம் அல்லது யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையிலுள்ள நமது 10496 ஆம் இலக்கக் கணக்குக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

- துணை வேந்தர்

யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.
யாழ்ப்பாணம்.
01-11-1988
(C-727)


# நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா?

## இன்றே தீர்வு காண சிங்கர்

## பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்

கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500 கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1"×1" ரூ. 4,090/-
ஈ.பி. 15 1½"×1½" ரூ. 4,290/-
ஈ.பி. 20 2"×2" ரூ. 5,930/-




விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. இடைஙகலானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி வந்துவிட்டது!

## வணிக மஞ்சரி

ஜூன் - ஆகஸ்ட் 1988
வழமையான அம்சங்களுடன்
ஏற்றுமதிச் சிறப்பிதழாக
மலர்ந்துள்ளது.

சகல முன்னணி
புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
தொகை கொள்வனவுகளுக்கு:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கு வழமையான சழிவு
வழங்கப்படும். (7864)


வலி - கிழக்கு, தெ. ப. ப. நோ. கூ.
சங்கம், நீர்வேலி.

## அறிவித்தல்

வலிகிழக்கு - தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 09 - 11 - 88ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்வேலி. பொது முகாமையாளர்.
1988-11-01. (C/729)

## முதலாம் வருட நினைவு கண்ணீர் அஞ்சலி



மலர்வு: 19- 06- 1964 உதிர்வு: 03- 11- 1987

கீத பொன்கலன்
கெலிஸ்ரஸ் கொலின்

இவரின் ஆன்ம சாந்திக்காக 04-11-1988 இல் அச்சுவேலி புனிதசூசையப்பர் ஆலயத்தில் காலை 5 45 மணிக்கு இரங்கல், திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

-குடும்பத்தினரும், உறவினரும்.
அச்சுவேலி. (7551)

## JAFFNA COLLEGE

Institute of Technology
Vaddukkoddai
Fourth Annual Inter Hall Athletic Champianships

### 4 ஆவது வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள்

மேற்படி போட்டிகள் எதிர்வரும் 4-11-88 வெள்ளிக்கிழமை பகல் 1.30க்கு ஆரம்பமாகி நடைபெறும்.

கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களும்
(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)
திருமதி எஸ். வி. ஜெபநேசன்
அவர்களும
பிரதம விருந்தினர்களாகக்
கலந்து கொள்வார்கள்.

பெற்றோர், பழைய மாணவர்கள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்புவோர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

—பணிப்பாளர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா. க தொ. நு நிறுவனம்,
(C/730) வட்டுக்கோட்டை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25 - 12 - 1972

உதிர்வு: 20 - 10 - 1987

### இராஜதுரை பிரபாகர்
(பிரபா)

நீ இறைவனடி சேர்ந்து ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் போனாலும் எம் துயரம் எம்மைவிட்டகலாது. அன்பிற்கும் பண்பிற்கும் இறை தொண்டுக்கும் வாழ்வில் வழிகாட்டியாய் இருந்தாய்! ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உன் பிரிவால் வாடுகின்றோம்.

உன ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

- ஞானவைரவ கோயில்
தொண்டர் சபை.

உரும்பராய் கிழக்கு.
உரும்பராய். (7866)

# வானொலி நாடக எழுத்தாளர் வரிசையில் முதன்மையானவர்

## "கெட்டிக்காரர்கள்" வெளியீட்டு விழாவில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் நவ 3
வானொலிக்கு நாடகங்களை எழுதும் எழுத்தாளர்கள் வரிசையில் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையும் முதன்மை பெறுகிறார்.

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய 'கெட்டிக்காரர்கள்' வானொலி நாடக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு வி ஏ திருஞானசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு தப்ரபேன் மண்டபத்தில் இந்த நாடக நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இலங்கை ஒலி - ஒளி நேயர் மன்றமும், இரோஷனி குழுவினரும் இணைந்து நடத்திய இவ் விழாவுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு வி. ஏ. திருஞானசுந்தரம் தலைமை வகித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் 'அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களைத் தெரிவு செய்து அவற்றில் ஒன்பது நாடகங்களை நூலுருவில் கொணர்ந்துள்ளனர்.

'இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின் தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூல் இதுவாகும்.

இந்நூலை வெளியிட்டதன் மூலம் தமிழ் நாடக இலக்கியத்துக்கும் சேவை செய்துள்ளது அவர் பாராட்டப்பட வேண்டியவர்' என்றார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபன உதவித் தமிழ்ப் பணிப்பாளர் திரு பி. விக்னேஸ்வரன் உரையாற்றுகையில் 'இலங்கை வானொலி நாடகங்களுக்கு ஒரு தனித்துவம் உண்டு. இந்த மண்ணின் மணம் அவற்றில் கமழ்கின்றது. அதில இலங்கையிலும் தென் இந்தியாவிலும் விரும்பிக்கேட்கப்படுகின்றன. அதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும் அந்தந்த துறையையும் வளர்க்க வேண்டும்' என்றார்

கபவினி செல்வராசன் பேசும் போது 'அராலியூர் சுந்தரம்பிள்ளை ஆழமான சமூகப் பிரச்சினைகளை எடுத்து அழகான நாடகமாக படைக்கின்றார்.

'அவரது நாடகங்களில் நடிப்பதென்றால் எமக்கு மிகவும் பிரியம் ஏற்படும். ஏனெனில் அவர் பாத்திரங்களை தத்ரூபமாக கவர்ந்தெடுக்கின்றார்' என்றார்.

மற்றும் தினகரன் ஆசிரியர், திரு. ஆர். சிவகுருநாதன் வீரகேசரி ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச் செல்வன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-10)

### விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம் நவ 3
இலங்கை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன அங்கத்துவ மாவட்ட சமாசங்களின் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டங்களுக்கான வங்கிகளுக்கு உதவிச் செயலாளர்களை நியமிப்பதற்கு யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார், வவுனியா மட்டக்களப்பு, கல்முனை ஆகிய மட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

பருத்தித்துறை, நவ 3
யாழ் திறந்த பல்கலைக் கழகத்தில் கடந்த வருடம் நடைபெற்ற உயர் தொழில் ஆங்கில சான்றிதழ் பயிற்சி நெறியில் 82 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இம் மாதம் 6ஆம் திகதியும் பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ளது என இலங்கை திறந்த வெளிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டி எஸ். விஜயசேகரா அறிவித்துள்ளார் (ச-118)

### சித்திரத் தேர் அச்சேற்று வைபவம்

சாவகச்சேரி நவ.3
சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயல் ஸ்ரீ வேதவனப்பிள்ளையார் ஆலயத்தில் பல இலட்ச ரூபா செலவில் உருவாக இருக்கும் சித்திரத் தேருக்கான அச்சேற்று வைபவம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. (ச 31)

### தென்மராட்சி திருத்தல வரலாற்று நூல்

சாவகச்சேரி நவ-3
தென்மராட்சி திருத்தலங்களின் வரலாற்றுத் தொகுப்பு நூல் ஒன்று விரைவில் வெளிவரும்.

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கத் தலைவரும் ஆத்மஜோதி ஆசிரியருமான திரு. நா. முத்தையா இப் பணியை மேற்கொண்டுள்ளார். (ச-31)


BROILERS

இறைச்சிக் கோழி

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இறைச்சிக் கோழிகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. உடன் கத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் Farm Centre
C/o நல்லூர் வீடியோ சென்டர்
(C-436)


## கேள்வி அறிவித்தல்

பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்வி புனருத்தாரணத் திட்டத்தின் கீழ்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள்.

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1988 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி (18-11 88) வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதிவரை (15-11 88) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக (ரூ 50/-) ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்விப்பத்திரப் பணமாக (ரூ. 250/-) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் ஆகியன யாவும் வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி (18-11-88 காலை 0 30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திணைக்களக் கேள்விச் சபையால் திறக்கப்படும். அச் சமயம் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கு. சோமசுந்தரம்
பதில் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித்
திணைக்களம், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

| பாடசாலையின் பெயர் | வேலையின் விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யா/ வசாவிளான் ம. ம. வி., வசாவிளான். | மாடிக் கட்டிடம் படிவம் 1 1' 130' 0''X25'0'' | 1,100, 000/- |
| 2. யா/ வசாவிளான் ம. ம வி, வசாவிளான். | பெருந்திருத்த வேலை | 900, 000/- |
| 3. யா/ நீர்வேலி றோ க. த. க. பா., நீர்வேலி. | மாடிக் கட்டிடம், படிவம் 1 11 40' 0'' X 25' 0'' பெருந்திருத்த வேலையும். | 750, 000/- |
| 4 யா/ சென்திரேசா பெ பா. அச்சுவேலி. | பெருந்திருத்த வேலை | 150, 000/- |
| 5. யா/ தேவரையாளி இ க. கரவெட்டி. | பெருந்திருத்த வேலை | 200, 000/- |
| 6. யா/ தொண்டமனாறு வீரகத்தி ம வி, தொண்டமானாறு. | பெருந்திருத்த வேலை | 1,200, 000/- |
| 7. யா/ தொண்டமானாறு வீரகத்தி ம. வி, தொண்டமானாறு. | மாடிக் கட்டிடம் 90' 0''X 25' 0'' | 1,200, 000/- |
| 8 யா/ யூனியன் கல்லூரி. தெல்லிப்பழை | மாடிக் கட்டிடம் 163' 9''X 25' 0'' | 1,300, 000/- |
| 9. யா/ புலோலி மெ. மி. த. க. பா., புலோலி. | மாடிக் கட்டிடம் 90' 0''X 25' 0'' | 1,200, 000/- |

(C/728)

# ஒரு வருட நினைவஞ்சலி



| வில்லி ராஜா | சுரேஸ் | பிரியந்தி | மகேந்திரராஜ் |
|---|---|---|---|
| உதயம்: 19-05-1911 | உதயம்: 12-01-1967 Old Boy St. Patrics | உதயம்: 24-05-1971 Student Uduvil Girls | உதயம்: 31-10-1972 Student Manipay Hindu |

அழிப்பு: 03 - 11 - 1987

எம்மை எல்லாம் பாசத்துடன் வளர்த்து ஆளாக்கி மேன்மையுடன் வாழ்ந்து ஒரு நொடிப்பொழுதில் எம்மை விட்டகன்ற எமதன்புத் தாயே! உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

— அன்புப் பிள்ளைகள்.

எம்மை எல்லாம் பேரிடியில் ஆழ்த்திவிட்டு இளம் வயதிலேயே மீளாத்துயில் கொண்ட எம் மூன்று செல்வங்களே! உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை: சிவபாதம்
தாய்: வசந்தி,

(7664)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

**பொருள்:**
ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமல் இருக்க வேண்டும்; அதுபோல் துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்

உதயன்
உண்மை - அஞ்சாமை - ஐயமின்மை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
03-11 1988 த. பெ இல 23

# பொருளாதாரத் தேய்வு

இலங்கையின் பொருளாதார நிலை எப்போதும் இல்லாதவாறு படுமோசமான நிலைக்கு வந்திருக்கிறதாம்!

பதினொரு வருடங்களாக நிதி அமைச்சராகப் பதவி வகித்துச் சாதனை புரிந்த பின்னர், பழைய இடத்துக்குப் போயிருக்கும் திரு ரொனி டிமெல் இப்படிச் சொல்லவில்லை.

இலங்கைக்குப் 'பாவம் பார்த்து' கடன் வழங்கி வரும் கடன், வழங்குவதற்காக தனது கொள்கைகள் பலவற்றை இலங்கை அரசிடம் திணிக்கும், உலக வங்கியே இப்படித் தெரிவித்திருக்கிறது!

திறந்த பொருளாதாரம், கட்டுப்பாடு இல்லாத இறக்குமதி போன்ற கொள்கைகளால் நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு வருவதாகவும், தேசிய நிகர உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் அரசாங்கம் கூறி வந்தது.

ஆனால் உலக வங்கியின் அறிக்கை அரசின் அந்த ''அண்டப் புளுகுகளை'' எல்லாம் பொய்யாக்குவதாக உள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்று. பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த காரணத்தால், நாட்டின் சுபீட்சம் நாடாத பொருளாதாரக் கொள்கைகள், திட்டங்களால் நலிந்த நாடு.

திட்டமிட்ட முறையில், நிதி, நிர்வாகச் சீருடன் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை உள்ள நாடு ஆனால் அதில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக...

இந்த நாட்டிலேயே ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் தமிழ் இனத்தை அடக்கி ஆண்டு, அடிமைகளாக வைத்து ஆள வேண்டும் என்பதற்காகப் பாதுகாப்புச் செலவுக்காக பல நூறு கோடி ரூபாவை அரசு செலவழித்தது.

தமிழர்களது நியாயமான உரிமைகளைக் கூட வழங்கக்கூடாது என்ற பிடிவாதத்துடன், படைகளைப் பெருக்கியது; பாதுகாப்புச் செலவையும் அதிகரித்தது.

நாட்டில் அமைதி இல்லாத காரணத்தால், தமிழ்ப் பகுதிகளில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் உற்பத்தி வீழ்ந்தது வருமானம் சரிந்தது. அப்படியாயின பொருளாதாரம் மோசம் அடையாமல், என்ன செய்யும்?

பாதுகாப்புச் செலவால் நாட்டின் பொருளாதாரம் தேய்ந்து போகும் என்பது எவருக்கும் தெரிந்த விடயம். அது அரசாங்கத்துக்கும், ஆட்சியாளர்களுக்கும் தெரியாத விடயமா? உலகவங்கி சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

பாதுகாப்புச் செலவுக்கு மேலும் பணம் 'இறைக்க முடியாது என்ற நிலையில்தான், ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய அமைதிப்படையை வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பாதுகாப்புக்கு அழைத்தார். இதனை நாம் சொல்லவில்லை ஜனாதிபதி ஜெயவர்த்தனவே பொதுக்கூட்டம் ஒன்றில பேசுகையில் தெரிவித்தார்.

ஆனால் இப்போது தெற்கிலும் பாதுகாப்புக்குச் செலவழிக்கவேண்டிய காலம் வந்திருக்கிறது.

நாடு முன்னேறவேண்டுமானால், பொருளாதாரம் மேம்படவேண்டுமானால் பாதுகாப்புச் செலவு குறைக்கப்படவேண்டும். அதற்கு நிரந்தர அமைதிநிலை உருவாகவேண்டும்

இந்த அமைதிநிலையைத் தோற்றுவிக்க, ஆட்சிக்கு வருபவர் எவராக இருந்தாலும், மனம் விரும்பிச் செயற்படவேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று செயற்படுத்தும் ஆட்சி இருக்கும்வரை நாடு சீரழியவே செய்யும், அதனைத் தவிர்க்கமுடியாது

1954 ஜூலைக்குப் பின் பிறந்தோர்

# பிறப்பு அத்தாட்சிப் பிரதி பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம், நவ. 3

1954ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பிரதி எதுவும் தற்பொழுது யாழ். செயலகத்தில் வழங்கப்பட மாட்டாது.

இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பிரதி ''பி. 64. ஏ'' என்ற பத்திரத்திலேயே பிரதி பண்ணப்பட்டு வழங்கப்பட்டு வருவது வழக்கம்.

தற்பொழுது இந்தப் பத்திரம் யாழ். செயலகத்தில் இல்லாததன் காரணமாகவே இவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பிரதிகளை வழங்க முடியாத நிலையில் இருப்பதாக செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

# இஸ்ரவேலில் மீண்டும் கூட்டரசு?

ஜெருசலம், நவ 2

இஸ்ரவேல் நாடாளுமன்றத்தேர்தல் முடிவுகளின்படி மீண்டும் பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் தலைமையிலான லிகுட் கட்சியே கூட்டு அரசு ஒன்றை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரஸ் தலைமையிலான தொழில் கட்சி கணிசமான அளவு ஆசனங்களைக் கைப்பற்றியபோதும் கூட்டு அரசு அமைக்கும் சாத்தியம் குறைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இருப்பினும் இரண்டு கட்சிகளும் தனித்தனியே சிறுபான்மை மதவாதக் கட்சிகளுடன் கூட்டு அரசு அமைக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

இதனிடையில்,

''அடுத்த அரசாங்கத்தை நானே அமைப்பேன்'' என்று இஸ்ரவேல் பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் நேற்றுத் தெரிவித்தார்

120 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றத்தில் பிரதமரின் லிகுட் கட்சிக்கு 39 ஆசனங்களும் வெளியுறவு அமைச்சர் பெரஸின் தொழில் கட்சிக்கு 38 ஆசனங்களும் கிடைத்துள்ளன. (எ)

வெளி உலகில்

# ஆப்கனுக்கு நவீன ஏவுகணைகள் சோவியத் யூனியன் வழங்கியது

வாஷிங்டன், நவ 2

ஆப்கனிஸ்தான் அரசுப்படைகளுக்கு நவீன ஏவுகணைகளை சோவியத் யூனியன் வழங்கியிருக்கிறது

அதிக சக்தி வாய்ந்த இந்த ஏவுகணைகள் நீண்ட தூரம் பயந்து சென்று பலத்த அழிவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்

இந்த ரக ஏவுகணைகளைப் பாவித்தே வளைகுடா யுத்தத்தில் ஈரானின் நகரங்களை ஈராக் படைகள் தாக்கின என்பது குறிப்பிடத்தக்கது

இத்தகவல்களை வெளியிட்ட சோவியத அரசு ஆப்கன் செரில்லாக்கள் பாகிஸ்தான் ஊடாகப்

### அமெரிக்காவுக்குக் கவலை

பெற்றுவரும் நவீன ஏவுகணைகளுக்குப் பதிலடி கொடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்தது

இதனிடையில் ஆப்கன் அரசுப் படைகள் சோவியத் அரசு வழங்கிய பாரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி கெரில்லாக்களைத் தாக்கி வருவது குறித்து அமெரிக்கா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை — கெரில்லாக்கள் நேற்று காபூல் மீது ரொக்கட் தாக்குதல் நடத்தினர். 12 ரொக்கட்டுக்கள் ஏவப்பட்டன. ஒருவர் உயிரிழந்தார். 17 பேர் காயமடைந்தனர். அனைவரும் பெண்கள், குழந்தைகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆயுத உற்பத்தியில் பிரிட்டன் கூடுதல் நிதி ஒதுக்கீடு

லண்டன் நவ 2

பிரிட்டன் தனது பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்துள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள நிதி நவீன போர்க் கருவிகளை உற்பத்திசெய்யப் பயன்படுத்தப்படும் என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் யங் தெரிவித்தார்.

யுத்தகளத்தில் பயன்படுத்தப்படும் பீரங்கிகள் அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிகள், நாசகாரிகள், புதியரக சண்டை விமானங்கள் முதலின வர்த்தக ரீதியில் தயாரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் உலகின் பெரிய ஆயுத விற்பனை நாடாக பிரிட்டன் விளங்கப்போகிறது என்று பி. பி. சி. வானொலி நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதியாகத் தெரிவானதும்

# கோர்ப்பச்சேவுடன் உச்சி மாநாடு நடத்தப்போவதாக புஷ் அறிவிப்பு

வாஷிங்டன், நவ 2

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இம்மாதம் எட்டாம் திகதி நடைபெறவிருக்கிறது.

நாள் நெருங்க, நெருங்க, ஜனநாயகக் கட்சி, குடியரசுக்கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்கள் தங்கள் பிரசாரங்களை முடுக்கி விட்டுள்ளனர்.

குடியரசு வேட்பாளர் ஜோர்ஜ்புஷ் நான்கு மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் முன்னணியில் நிற்பதாக கருத்துக்கணிப்பு ஒன்று கூறுகிறது

இதனிடையில் குடியரசு வேட்பாளரான தற்போதைய உப ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் முதல் வேலையாக சோவியத் தலைவர் கோர்ப்பச்சேவ்வைச் சந்தித்து உச்சிமாநாடு நடத்துவதற்கு முயற்சிப்பேன்'— என்று சொன்னார்.

ஆயுதக் குறைப்பு, பிராந்திய பதற்ற நிலையைத் தணிப்பது, மனித உரிமைகளைப் பேணுவது — ஆகியன அந்த உச்சி மாநாட்டின் போது ஆராயப்படும் என்றும் திரு புஷ்தெரிவித்தார். (எ)

# வளைகுடாப் பேச்சு மீண்டும் ஆரம்பம்!

ஜெனிவா, நவ.2

வளைகுடா அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் ஜெனிவாவில் ஆரம்பமாகின.

இப்பேச்சுக்களின்போது ஈரான, ஈராக் வெளியுறவு அமைச்சர்கள் நேருக்கு நேர் அமர்ந்து இருந்து பேசுவர் என்று ஐ நா பொதுச் செயலாளர் அறிவித்தார்.

இதுவரை நடந்தபேச்சுக்களின் போது இரு நாட்டு அமைச்சர்களும் ஐ நா பொதுச் செயலாளர் ஊடாகவே பேச்சுக்களை நடத்தினர் (எ)

நூல் ஆய்வில் கருத்து:

# கருத்தை வைத்துப் பழமொழி பயன்படுத்தி இருந்தால் பாடநூலாகி இருக்கும்

குருநகர்-நவ 3

பழமொழியை அடிப்படையாக வைத்து ஆக்கப்பட்டிருக்கும் கட்டுரைக் கதைகளைத் தொகுத்துத்தந்திருக்கும் நூலாசிரியர் கருத்தை வைத்து அதற்கு பழமொழியைப் பயன் படுத்தி இருந்தால் இந்நூலை மணவர்களுக்கு பாட நூலாகத் தெரியச் சிபார்சு செய்யக் கூடியதாக அமைந்திருக்கும்.

திரு. க. சத்தியானந்தசிவம், ''சச்சிமாஸ்ரர்'' எழுதிய ''மக்கள் வாழ்வில் பழமொழி'' என்னும் நூலை ஆய்வு செய்த யாழ் பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி ஜி பரராசசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

நூல் வெளியீடும் சச்சிமாஸ்டரின் மணிவிழாவும் யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன

திரு வே. யுபாலசிங்கம் வைபவத்திற்கு தலைமை வகித்தார்

வரவேற்புரையை ஆசிரியர் திரு. ப ஜீவானந்தம் நிகழ்த்தினார்.

மணிவிழாவை வைபவத்தில் கலட்டிப்புல ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையினர் நூலாசிரியருக்கு ''பழமொழிச் செல்வர்'' என்னும் பட்டமளித்துக் கௌரவித்தனர்.

யாழ் கமநலசேவைத் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர். திரு க. பரமலிங்கம் யாழ்ப்பாணம். இலங்கை வங்கி பிரதம முகாமையாளர் திரு க திருநாவுக்கரசு ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர்.

தொடர்ந்து ஆய்வுரை நிகழ்த்துகையில் திருமதி ஜி பரராஜசிங்கம் தெரிவித்ததாவது.

''சச்சிமாஸ்டரின் இந் நூலில் எல்லோராலும் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் பழமொழிகள் கையாளப்பட்டுள்ளன

சம்பவக் கோவைகளை ஒரு கதை சொல்லும் உத்தியில் படைத்துள்ளார்''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் பேசுகையில்: ''ஈழவள நாட்டினரின் இலக்கியப் பொக்கிஷங்களைத் தேடிச் சேர்க்கும் பணியாக 'சச்சிமாஸ்ரர், இந்நூலை ஆக்கித்தந்திருக்கிறார்

இந்நூல் அவரது நீண்டகால அனுபவ உழைப்பினூடாகத் தோன்றியுளளது.'' என்றார்

கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை பேசுகையில்: வானத்துக்குத் தாரகை போன்று பேச்சுக்கு பழமொழி அமைகிறது.

சிறுகதைகளைஇலக்கிய திறனாய்வுக் கட்டுரைகளை வாசிக்கின்ற பொழுது ஏற்படுகின்ற ஓர் இலக்கிய நயவுணர்வு இந்நூலில் அமைந்துள்ள பழமொழிக் கட்டுரைக் கதைகளை வாசிக்கும் பொழுது ஏற்படுகிறது''

இப்படி அவர் தெரிவித்தார்.

ஆசிரிய ஆலோசகர் ஜனாப் எஸ் எம் ஏ நகீம் பாராட்டுரை வழங்கினார்.

'புத்தொளி' திரு. ந. சிவபாதம் வெளியீட்டுரையும், நூலாசிரியர் திரு. க சத்தியானந்தசிவம் பதிலுரையும் வழங்கினர். (ச-51)

# யாழ்நீதிமன்ற ஆவணங்கள் பாதுகாப்பான இடத்தில்

யாழ்ப்பாணம் நவ 3

யாழ் நீதிமன்றத்தில் இருந்த முக்கிய ஆவணங்கள் நல்லூரில் உள்ள ஒரு வீட்டுக்குப் பாதுகாப்பாக இடம்மாற்றப்பட்டுள்ளன.

யாழ். நீதிமன்றத்தில் இருந்த பல ஆவணங்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக சேதமடைந்திருந்தன.

இதனையடுத்து யாழ். மாவட்ட நீதிபதி திரு. வி சுந்தரலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக ஆவணங்கள் நல்லூரில் உள்ள வீடொன்றுக்குப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டன.

வழக்கு அறிக்கைகள் மற்றும் வழக்குப் பதிவுக் குறிப்பேடுகள் உட்பட ஆவணங்கள் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நன்மை கருதியும் சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதை அடுத்துமே இந்த ஆவணங்கள் இடம்மாற்றப்பட்டதாக நீதிமன்ற வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

இந்த ஆவணங்கள் மூன்று தொகுதிகளில் ஏற்றப்பட்டதாகவும் மேலும் இரண்டு தொகுதிகளில ஏற்றப்படும் எனவும் யாழ் மாவட்ட நீதிபதி உதயனுக்குத் தெரிவித்தார்.

### மினிவானினால் மோதுண்டார்

கோப்பாய் சாவகச்சேரி மினிபஸ் ஒன்றினால் நீர்வேலியைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளி ஒருவர் மோதுண்டார். (இ-72)

# ஒஸ்கா வி. க. ஆண்டு விழா

யாழ்ப்பாணம் நவ 3

உரும்பிராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் தனது இரண்டாவது ஆண்டு விழாவை சமீபத்தில் கொண்டாடியது.

மறைந்த வீரன் விக்ரரின் நினைவாகவே ஒஸ்கா என்ற பெயர் சூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# சட்டமாணி தெரிவு பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் சட்டமாணிப் பட்ட நெறிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் ஆறும் திகதி காலை 9. 30 மணியிலிருந்து காலை 11 30 மணி வரை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பவிலியன் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப்பரீட்சைக்கான பதிவு எண்களை இதுவரை பெறாதவர்கள் உடனடியாக யாழ் திறந்த பல்கலைக்கழகத்தின யாழ் பிராந்திய உதவிப் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது (ஒ-ஐ)

தாயகம் திரும்பிய அகதிகளுக்கு

# வீடுகள் கட்டும் பணி ஆரம்பமாகிவிட்டது

யாழ்ப்பாணம் நவ 3

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகளில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவித்திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் திட்டத்தின கீழ் மூன்று வீடுகளை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கோண்டாவிலில் இரண்டு வீடுகளும், ஈச்சமோட்டையில ஒரு வீடுமாக அமைக்கப்பட்டு வருகிறது. (ஒ-ஐ)

### திறந்த பல்கலைக்கழக வைபவம்

யாழ்ப்பாணம் நவ. 3

யாழ் திறந்த பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் ஆங்கில பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஆறும் திகதி காலை பத்து மணிக்கு நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார்.(இ-ஐ)

### இளைப்பாறினர்

கோப்பாய் நவ 3

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபராக கடமையாற்றிய திரு க. நாகராசா ஆசிரியர் திருமதி ம. சுப்பிரமணியம் ஆகியோர் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறினர் (இ-72)

# பந்துல சேனாரத்ன கொலை குறித்து கைஸ் கண்டனம்

சுயாதீன மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட தோழரான 'பந்துல சேனாரத்ன' வின் கொலையை மாணவர் இளைஞர் பொதுமன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது இழப்புக்களின் மத்தியிலும் தொடர்ந்தும் சுதந்திர மாணவர் சங்கத்தின் முற்போக்கான செயற்பாடுகள் தொடரட்டும். கடந்த காலங்களில் பிற்போக்குவாதச் சதிகாரர்களின் அச்சுறுத்தலுக்குச் சுதந்திர மாணவர் அமைப்பும், அதன் தோழர்களும் உள்ளாக்கப்பட்டனர். ஆயினும் அவற்றுக்கு செவி சாய்க்காது தங்கள் உயிரையே இலங்கைமண்ணில் சுதந்திர சோஷலிச சமுதாயம் ஒன்றை அமைத்திட அர்ப்பணமாக்கினர்.

மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுதத அறிக்கையில மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று நேற்றல்ல இப்படுகொலைகளின் ஆரம்பம்.

சுதந்திர மாணவர்சங்கத்தின் தலைவரான தோழர் தயாபத்திரன் மாணவர்கள் ஒற்றுமைக்காகவும், புரட்சிகர முன்னெடுப்பாளராகவும் விளங்கினார் இந்த மண்ணின் மைந்தனான தோழர் தயாபத்திரன் இன்று அனைத்து மாணவர் நெஞ்சங்களிலும் தீப்பற்றிக்கொண்டுள்ளார்.

'பந்துல சேனாரத்தின' சுதந்திர மாணவர் அமைப்பின் சிரேஷ்ட தோழராவார். இவன் செய்த பணிகள் அளப்பரியது. ஸ்ரீலங்காவின் சிங்கள முற்போக்கு மாணவர் சமுதாயம் ஒன்றைப் படைத்த இவனைச்செய்த செயற்திட்டங்கள் எத்தகையவை.

இதனால்தான இன்று அவனுக்கு மரணம் என்பது பரிசாக்கப்பட்டுள்ளது துப்பாக்கி ரவைகள்கூட துர்ப்பாக்கிய நிகழ்வுகளுக்கு அடிபணிந்துவிட்டனவே

'பந்துல சேனாரத்ன' பாசிசப் பிற்போக்குவாதச் சதிகாரக் கும்பல்
(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

03 - 11 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள

மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

## கிட்டு வீட்டில் தேடுதல்

வடமராட்சி, நவ 3 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப்பிரமுகர் கிட்டுவின் தாயாரின் வீட்டில் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் தேடுதல் நடத்தப்பட்டது

இந்தவிடயம் தொடர்பாக கிட்டுவின் தாயார் திருமதி எஸ். சதாசிவம் பலாலி அமைதிப்படை முகாமில் நேற்று நேரடியாக முறைப்பாடு செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளையில் திருவிலில் உள்ள கிட்டுவின் சகோதரர் ச. காந்திதாசனின் வீட்டிலும் காட்டுவளவில் மற்றொருவரின் வீட்டிலும் தேடுதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது (உ-160)

## வர்த்தகர் சங்கம் கலைப்பு

வடமராட்சி, நவ. 3 பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் நேற்று முன்தினம் கலைக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் திரு. எ. பவான் தெரிவித்தார். [உ-160]

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், நவ3 வவுனியாவில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் நேற்று விசேடபஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இன்று தபால் விநியோகம் நடைபெறும் என எதிர்பாக்கப்படுகிறது (10)

## 751இலக்க மினிபஸ் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது

வடமராட்சி, நவ3 யாழ்- பருத்தித்துறை 751 இலக்க மினிபஸ் சேவைகள் இடைநிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 751 இலக்க பஸ்சேவையின் நேரக் கணிப்பாளரை விடுவிக்ககோரியே சேவைகள் இடைநிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக மினிபஸ்களின் உரிமையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

## பெண் காயம்

கோப்பாய் நவ 3 கோப்பாய்ப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் காரணமாக பெண் ஒருவர் காயமடைந்தார்.

அல்வாயைச் சேர்ந்த தவமணி [வயது 50] என்பவரே காயமடைந்தவராவர் [ஒ 72]

## இலங்கை அணி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் அத்துல சமரசேகர 38, பிரண்டன் குருப்பு ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கைத் தரப்பில் 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய அணித்தலைவர் ரவி ரட்ணயக்கா ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். (உ)

## வல்வையில் கைதானோரை விடுவிக்க முயற்சி

வடமராட்சி, நவ 3 கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் இடம்பெற்றதேடுதலின் போது கைதான 38 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக வல்வெட்டித்துறைப்பகுதியின் முக்கிய பிரமுகர் ஒருவர் உடுப்பிட்டி அமைதிப்படை முகாம் அதிகாரிகளுடன் பேசி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண்!

கைதானவர்களில ஜி சி ஈ பரீட்சைக்குத் தோற்றும் மபணவர்களும் அடங்கியிருப்பதால் பரீட்சையைக் கவனத்தில் கொண்டு அவர்களை விடுவிக்க வேண்டும் எனப் பெற்றோர்கள் கோரி வருகின்றனர். (உ-160)

## முன்னாள் இன்ஸ்பெக்டர் சூட்டுக்கு இலக்கானார்

### ஆனைக்கோட்டையில் சம்பவம்

ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. மைக்கல் பேரின்பநாயசம் கடந்த திங்கட்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

திங்கட்கிழமை ஆனைக்கோட்டையில் உள்ள அவரது வீட்டில்வைத்து இந்தச் சம்பவம் நடைபெற்றது.

தற்போது அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். இடது தோளிலும் முகத்திலும் அவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. (ஒ-5 10)

## நேர்முகப் பரீட்சை

பலாலி ஆசிரிய கலாசாலையில் தாபனப் பயிற்சியை முடித்துக்கொண்டோருக்கான கட்டுறு பயில்வு மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளது.

1986/87 ஆம் ஆண்டில் பயிற்சியை முடித்து வெளியேறியோருக்கான நேர்முகப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்

இதற்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை அனுமதிக் கடிதங்கள் கிடைக்காதவர்கள் உடனடியாக கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (ஒ-5)

### ஆங்கில வகுப்பு

G. C. E. (O/L) Dec. 1988 (A/L)
மாணவருக்கான
ஆங்கிலம், SPOKEN ENGLISH
ஆரம்பமாகின்றன
சர்வகலாசாலை சட்ட மாணவருக்கும் வகுப்புக்கள் உண்டு.
K கதிர்காமநாதன் B A., ஆசிரியரால் அவருடைய கட்டுடை, மானிப்பாய் இல்லத்தில் நவம்பர் 4 ஆம் திகதி முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
(7710)

### பத்திரிகையாளர் பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✶ செய்தியாளர்கள்
(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

✶ உதவி ஆசிரியர்கள்
(3 வருட அனுபவம்)

✶ மொழி பெயர்ப்பாளர்கள்
(மும்மொழிகளிலும் தேர்ச்சி)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
நிர்வாக இயக்குநர்.
உதயன்-சஞ்சீவி
நிறுவனம்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

✶ சிறுவர் ✶ சிறுமியர் ✶ ஆடவர் ✶ மகளிர்
✶ ஏற்றதான கண்கவர் தீபாவளி
✶ ஜவுளித் தெரிவுகளுக்கு
✶✶✶ மம்மி டி ✶✶✶
100, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(7865)

## தென் இலங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. வி பியின் ஹர்த்தால் அழைப்பை எப்படி முறியடிப்பது என்பது குறித்து அரசாங்க மேல் மட்டத்தில் கருத்து வேறுபாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் ஒரு வெளிப்பாடாக ஊரடங்கு உத்தரவு விடயத்திலும் குளறுபடி நிலைமை நிலவியதாக கொழும்புச் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

### ஊரடங்கு

நேற்று இரவு 10மணி முதல் இன்று அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படும் என நேற்று மாலை முதலில் அறிவிக்கப்பட்டது.

பின்னர் ஊரடங்கு உத்தரவு வாபஸ் பெறப்பட்டிருப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

எனினும் மீண்டும் இரவு 11 மணிமுதல் காலை 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவதாக அறிவிப்பு வெளியானது.

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றைக்குழப்பும் நோக்கத்துடனும் —

### அரசு அறிக்கை

மக்களின் வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பவற்காகவுமே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாசகார சக்திகள் முயன்று வருவதாக அரச அறிக்கை ஒன்றில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இதனிடையில் நேற்று இரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட 5 மணித்தியால ஊரடங்குச்சட்டம் மேலும் நீடிக்கப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாக பி. பி. சி. அறிவித்தது. (உ-எ)

## பன்னலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

அரசின் அமைச்சர் ஒருவரே இக்கொலைக்கு உத்தரவிட்டிருந்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

இக்கொலைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் இன்று வியாழன் பொது வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும்படி மக்கள் விடுதலை முன்னணி அழைப்பு விடுத்திருக்கிறது (உ-எ)

## பண்டத்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்

நாகேஸ்வரி திருநாவுக்கரசின் மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் இடம் பெற்றது. (உ-10)

## பந்துல,...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

களினால் மரணதண்டனை விதிக்கப்பட்டவன். உயிருடன் உள்ளபோதே மரணம் எப்போது வரும் என்பதை அறிந்து கொண்டவன். ஆயினும் தனது தாற்பரியங்களை, இலட்சியங்களை, தான் கொண்ட கொள்கைக்காகச் சுமந்து சென்றான்

விளைவாக இவனின் ஜீவ உயிர் 1988 அக்டோபர் 19இல் அனுராதபுரத்தை அண்டிய 'ரம்பாவை' எனும் இடத்தில் வைத்துப் பறிக்கப்பட்டது இவன்கொண்ட இலட்சியங்களையும்: செயற்திட்டங்களையும் சுதந்திர மாணவர் சங்கம் இட்டுச் செல்லட்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்ததையடுத்து ஊரடங்கு உத்தரவு காலை 8 மணிக்கு அமுல் செய்யப்பட்டது. தேடுதலும் தொடர்ந்து இதனால் பொது மக்களுக்கு ஏற்படவிருந்த அதிக பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

நெருக்கடி நிறைந்த சந்தைப்பகுதியில் இருடைம் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக பின்னர் பொது மக்கள் அமைதிப்படையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்த வெடிகுண்டுகள் அமைதிப்படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டதுடன் பொதுமக்களுக்கு ஏற்படவிருந்த பாதிப்பும் தவிர்க்கப்பட்டது.

யாழ். சந்தைப்பகுதியில் நவம்பர் 3ஆம்திகதி காலை 6 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ 3 யாழ். பல்கலைக்கழகப் 'பெண்கள் அமைப்பு' ஏற்பாடு செய்திருக்கும் ஓவியக்கண்காட்சி இன்று வியாழக்கிழமையும்சனிக்கிழமையும் நடைபெறுகின்றது.

யாழ்- பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்- பல்கலைக்கழகத்தில் இன்று மாலை 3 30 மணியில் இருந்து 5 மணி வரையும்— சனிக்கிழமை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரையும் கண்காட்சிநடைபெறும்.

பெண்களின் ஆளுமையை வளர்க்கவும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்குடனேயே இந்த ஓவியக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இந்த அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். [ஒ-5]

## மேலும் 9 ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் வந்தது

யாழ்ப்பாணம் நவ 3 விஞ்ஞானப் பட்டதாரி, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான மற்றொரு பெயர்ப்பட்டியல் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது-

ஏற்கனவே 102 பேரினது பெயர்ப்பட்டியல் வெளியாகி இருந்தது புதிய பட்டியலில் ஒன்பது பேரின பெயர்கள் இருந்தன-

அவர்களின் விவரம் வருமாறு:- எஸ் சயாவதி உடுவில் மேற்கு, கே தனபாக்கியேஸ்வரி வரணி, கே ஜெகதீஸ்வரி வரணி, எம் சுனிதாவதி சாவகச்சேரி-

ரி- புஸ்பவதி புங்குடுதீவு பி வை யோககுமாரி வவுனியா- ரி- ஜமுனாராணி செட்டிக்குளம், திரு வி இருதயநாதர் புதுக்குடியிருப்பு, திரு கே தருமலிங்கம் புதுக்குடியிருப்பு-

இந்த ஒன்பது பேருக்கான நியமனக் கடிதங்கள் ஏழாம் திகதி யாழ் கல்வித் திணைக்களத்தில வைத்து வழங்கப்படவுள்ளன-

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 102 பேருடன் புதிதாகத் தெரிவான 9 பேரினதும் சேவைக்காலமுன்பயிற்சி எதிர்வரும்பத்தாம்திகதி முதல் முப்பதாம் திகதி வரை யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டப்பதில் கல்விப் பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம் இத்தகவல்களைத் தெரிவித்தார், (ஒ-10)

## "தெய்வீக மாலை" நிகழ்ச்சி நாளை

யாழ்ப்பாணம் நவ 3 இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் நாளை வெள்ளிக்கிழமை" தெய்வீக மாலை" நிகழ்ச்சி ஒன்றை கொழும்புவிவேகானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சி மாலை6 15 மணிக்கு ஆரம்பமாகும்.

சேவாச்சிரமத்தின் 19 வருடசேவை பூர்த்தியை முன்னிட்டே இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுகிறது.

இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளையின் உபதலைவர் சுவாமி சம்பிரஜானந்தா தலைமையுரையும், பருத்தித்துறை ஸ்ரீ இராமக்கிருஷ்ணசாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா வரவேற்புரையும்நிகழ்த்துவர். (உ-ஒ)

## இறுதிச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு உத்தரவிட்டிருந்தது.

அதை மீறி பெரிய அளவில் இறுதிச் சடங்கு நடத்தப்பட்டது என்றும் அப்போதே இத்தாக்குதல் இடம்பெற்றது என்றும் கூறப்படுகிறது.

தாக்குதலை நடத்தியவர்கள் முன்னர் கொலை செய்யப்பட்ட நபரின் தலையை வெட்டித் தம்முடன் கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொலை செய்யப்பட்டவர் ஐ.தே கட்சி ஆதரவாளர் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன- (உ-எ)

## 1,200...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிக் கிளை காலை எட்டு மணி முதல் மாலை நான்கு மணிவரை அன்றையதினம் இயங்கும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ்வரும் கோப்பாய் வடக்கு, ஊரெழு, உரும்பராய் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து அரசாங்க அதிபரால் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து இருநூறு குடும்பங்களுககு இந்தநிவாரணப் பணம் இலங்கை வங்கியின் மூலம் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட பகுதிகளிலிருந்து நிவாரணப் பணம் பெறத் தகுதியுடையவர்களின் விவரங்கள் இன்று முதல் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி பிரதான கிளையின் அறிவிப்புப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

நிவாரணப் பணம் பெறுவதற்கு தகுதி பெற்ற அனைவரும் சனிக்கிழமையன்றே வங்கிக்கு வந்து அதனைப் பெற்றுக்கொள்வதே நல்லது என இலங்கை வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திரு கந்தையா - குமாரசாமி

(Retired Staff Officer-
City -Council Singapore)

சிங்கப்பூரில் 62 வருடங்கள் வசித்தவரான திரு. சுந்தையா - குமாரசாமி அவர்கள் 1. 11. 1988 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சி. வ. கந்தையா- முத்தம்மா ஆகியோரின் மூத்தமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சராயு கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்ற பாபு, விஜயன், Lt.Col சுமன், ரவீந்திரன், அச்சு ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சேனாதிராஜாவினதும் நகரம் அவர்களின் மருமகனும், மலேசியாவைச் சேர்ந்த க. வல்லிபுரம், கொக்குவில்கிழக்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி - இராசையா, கோண்டாவில் பலாலி வீதியைச் சேர்ந்த K இராமநாதன் (Retired Senior Technical Officer, Ministry of Highways) ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்ற பூபாலசிங்கம்(மலேசியா) திருமதி மகேஸ்வரி பொன்னுத்துரை (மலேசியா), காலஞ்சென்ற புவனேஸ்வரி குலசேகரம் (கோண்டாவில்), திருமதி இராஜேஸ்வரி வெற்றிவேலு (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). நா இராசையா (Rtd P. W. D Overseer Nuwara Eliya) அவர்களின் மைத்துனரும் ஆவார். இவரது ஈமக்கிரியைகள் 2.11 88 இல் இவாது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிங்கப்பூர் பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது உற்றார், உறவினர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்:
க. இராமநாதன்
58. Kalidasa Avenue,
Teachers Park.
Singapore.
(7704)

### திருமதி நாகேஸ்வரி கந்தையா

திருமதி நாகேஸ்வரி கந்தையா காலமானார். ஈமக்கிரியைகள் (03-11-88) இன்று வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்கு 'சந்திரோதயம்' இருபாலை கிழக்கு இல்லத்தில நடைபெற்றுப்பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
தகவல்
(7706) க. நித்தியராஜா

### திருமதி கந்தையா சீனிப்பிள்ளை

நயினாதீவை பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற காலஞ்சென்ற உயர்திரு. கந்தையா விதானையாரின் அன்பு மனைவி சீனிப்பிள்ளை [02-11 88] அன்று காலமானார். இவர் கமலாம்பிகை, இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சரவணமுத்து. கனகசபை சிவகாமிப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் [முன்னாள் உரிமையாளர் அஜந்தா ஒட்டல் லிமிட்டெட்] தியாகராசா (ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி) ஆகியோரின் மாமியாரும், திருச்செல்வம் (உரிமையாளர் அஜந்தா ஒட்டல் லிமிட்டெட்) யோகேஸ்வரி, மகேஸ்வரன் (உரிமையாளர் ஐலண்ட் பிறைற் பீச் இன்) கடேற்சஜன் (வைத்திய பீடம் யாழ். பல்கலைக்கழகம்), திருச்செல்வம், கலாரூபி, Dr பூபாலசிங்கம் (தள வைத்தியசாலை, சிலாபம்) ஆகியோரின் பேத்தியாரும், சுலச்சனா துவாரகா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக [03-11-88] இன்று பிற்பகல் 3-00 மணிககு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, ராணி வீதி (செம்மணி வீதி,)
[7707] நல்லூர். தகவல்: மகேஸ்வரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03- 11- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 3rd November 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org